1970 ஆகஸ்ட் 27]

(ஆ) ஓர் உறுப்பினரின் தெலுங்கு உரை பதிவு செய்யப் படாமல் இருக்கும்போது அவரை தெலுங்கில் உரையாற்ற அனுமதிப்பது குறித்து.

THIRU T. MARTIN : Sir, my point of order is whether an hon. Member could be allowed to speak in Telugu when his speech is not going into the records. I want a ruling from the Chair on this point.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரெகார்ட் பண்ணவில்லை என்று எப்படித் தெரியும்?.

THIRU T. MARTIN : The hon. member says that his speech is not recorded.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ. என்ன செய்கிறார்கள் என்று தெரியுமா?

THIRU T. MARTIN : Sir, the point of order is very short. The hon. Member says that his speeches are not being recorded when he speaks in this House. Now my short question is, whether any hon. member could be permitted to speak inside the House when his speech is not allowed to be recorded inside the House. I want a ruling from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன வழி என்று கேளுங்கள். அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. வெங்கடசாமி அவர்கள் பேசுகின்ற கருத்துக்களை, அவர்களுக்கு ஆங்கிலம் தெரியும், இருந்தாலும், தெலுங்கில் பேசுகிறார்கள், அவர்கள் ஒரு 'ஜிஸ்ட்' இங்கிலீஷில் கொடுப்பார்கள், அதை நிகழ்ச்சிக் குறிப்பில் சேர்த்துக்கொள்வோம். அந்த முறையில் செய்வோம்.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. பி. வெங்கடசாமி : தெலுங்கில் உரையாற்றினர்.

*திரு. மு. மாரிமுத்து : தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு பேசுகிறேன். பி.ப. 1-00

சென்ற ஆண்டு இதே மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையில் பேசியபோது ஒரு சில குறைகளை அவைமுன் வைத்திருந்தேன். அவற்றிற்கு நல்ல முறையில் பரிசீலனை செய்து, பதில்கள் சொல்லப்பட்டிருப்பதற்காக, இந்த அரசை முதலாவதாக பாராட்டவும், நன்றி செலுத்தவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

மின்சார வாரியத்தில் செய்யப்பட வேண்டிய சில காரியங்களைப் பற்றி நான் அடிக்கடி கூறிவந்தேன். அவைகள் நல்ல முறையில் செயலாக்கப்பட்டிருப்பது குறித்து நான் இந்த மின்சார வாரியத்தையும், அமைச்சரையும் பாராட்டுகிறேன்.